FIRST YEAR

Kerala Board Question Paper 2023



Download PDF
aglasem.com

Reg. No. : .....

Name : .....

FY-420

FIRST YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH 2023

Part – III

TAMIL (Optional)

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

General Instructions to Candidates :

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு எவையேனும் எட்டனுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் ஒன்று வீதம்

(1 × 8 = 8 மதிப்பெண்கள்)

1. 'காட்சிஉரு' என்றும் 'உருக்காட்சி'என்றும் அழைக்கப்படுவது?

   (அ) குறியீடு (ஆ) படிமம்

   (இ) உவமை (ஈ) உருவகம்

2. 'Folklore'என்ற சொல் எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?

   (அ) 1846 (ஆ) 1946

   (இ) 1746 (ஈ) 1646

3. 'கிளவி' என்பதன் இலக்கணப் பொருள்?

   (அ) கிழவி (ஆ) சொல்

   (இ) குளவி (ஈ) குழவி

4. மதுரைக் காஞ்சியின் ஆசிரியர்?

(அ) நக்கீரர் (ஆ) பெருந்தேவனார்

(இ) பெருவாய் முள்ளியார் (ஈ) மாங்குடி மருதனார்

5. மாட்டுக்கு எதைக் காட்டிப் பாலை கறக்க வேண்டும்

(அ) வைக்கோல் (ஆ) சாட்டை

(இ) கன்று (ஈ) தந்திரம்

6. பாலுமகேந்திரா இயக்கிய ஒரு திரைப்படம்?

(அ) தண்ணீர் (ஆ) பாசமலர்

(இ) தேவதாஸ் (ஈ) அழியாத கோலங்கள்

7. ஜப்பானின் மிகப்பழமை வாய்ந்த கவிதை வடிவம்?

(அ) கட்டவ்டா (ஆ) சோகா

(இ) தான்கா (ஈ) செடோகா

8. 'களையெடுக்கும் பெரியகுளம்
கணக்கெழுதும் ஆலமரம்'
– இவ்வரிகளில் இடம்பெறும் 'களை'என்பதன் பொருள்?

(அ) நெற்பயிர் (ஆ) மரம்

(இ) கோடைப்பயிர் (ஈ) பயிர்களிடையே வளரும் செடி

9. 'எது தமிழ்ச் செல்வம்' – என்ற கவிதையைப் படைத்தவர்?

(அ) வேழவேந்தன் (ஆ) அன்னிதாமசு

(இ) ரா. சுப்பையா (ஈ) பெருமாள்

10. இரண்டு சொற்கள் அடுக்கி வந்து பிரித்தால் பொருள் தராதது?

(அ) அடுக்குத்தொடர் (ஆ) பெயரெச்சம்

(இ) வினையெச்சம் (ஈ) இரட்டைக்கிளவி

aglasem.com

11 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம். (2 × 6 = 12 மதிப்பெண்கள்)

11. புதுக்கவிதையின் இயல்புகளும் இரண்டினைக் குறிப்பிடுங்கள்.

12. 'திரிகடுகம்' – சிறுகுறிப்பு எழுதுங்கள்.

13. பச்சைவயல் திரைக்கதையில் இடம் பெறும் கதாபாத்திரங்களின் பெயர்களை எடுத்தெழுங்கள்.

(ரங்கநாதன் – ராஜராம் – நடராஜன் – சோமு – தர்மு – செல்லம்மாள்.)

14. 'சொல்' என்பதன் இலக்கணம் எழுதுங்கள்.

15. 'படிமவியல்' சிறுவிளக்கம் தருக.

16. வலைப்பூக்களை உருவாக்குவதற்கான படிநிலைகள் இரண்டினை எழுதுங்கள்.

17. 'மோப்பக்குழையும் அனிச்சம் முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து'

– இக்குறட்பாவிற்கு சிறுவிளக்கம் தருக.

18. நாட்டுப்புற விளையாட்டுகளுள் எவையேனும் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுங்கள்.

aglasem.com

19 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு அரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் நான்கு வீதம்.

(5 × 4 = 20 மதிப்பெண்கள்)

19. பொருத்துங்கள்

(1) நாலடியார் – நல்லாதனார்

(2) நான்மணிக்கடிகை – காரியாசான்

(3) திரிகடுகம் – பதுமனார்

(4) சிறுபஞ்சமூலம் – விளம்பிநாகனார்

20. 'நாட்டுப்புறப்பாடல்கள் மண்ணின் மனம் வீசுவன' – இக்கூற்றை நிறுவுக.

21. 'நமக்கிருப்பது போல்

பறவைகளுக்கு

நாடுகளும்

எல்லைகளும் இல்லை

ஆனால்

பறவைகளின் சுதந்திரம்

நம்மிடம் இல்லை'

– இப்பாடல் வரிகளுக்கு விமர்சனக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

22. 'போரினால் ஏற்படும் தீமைகள்' எனும் தலைப்பில் பெட்டிச் செய்தி தயார் செய்யுங்கள்.

aglasem.com

23. கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கம் எழுதுங்கள்.

. ’எறும்பூர கல்லும் தேயும்’

. ’ஆணைக்கும் அடிசறுக்கும்’

. ’மின்னவதெல்லாம் பொன்னல்ல’

24. வலைத்தளங்களைத் தவறாக பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகளை எடுத்துக்கூறி உன் நன்பனுக்கு கடிதம் எழுதுங்கள்.

25 முதல் **29** வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள் மதிப்பெண்கள் ஆறுவீதம் **(4 × 6 = 24 மதிப்பெண்கள்)**

25. நயம் பாராட்டுங்கள்

‘தமிழுண்டு தமிழ்மக்களுண்டு – இன்பத்

தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு

தமிழ் என்று தோள்தட்டி ஆடு – நல்ல

தமிழ்வெல்க வெல்க என்றே தினம்பாடு’

– பாரதிதாசன்

குறிப்புகள் : சொல் நயம் பொருள் நயம்.

26. உங்கள் பள்ளியில் நாட்டுப்புறவியல் துறை 'பாவைக்கூத்தின் இன்றைய நிலை' குறித்து பேச்சுப்போட்டி நடத்த உள்ளது. அதில் பங்கேற்க ஒரு சொற்பொழிவுறை தயார் செய்யுங்கள்.

27. 'இணையக்குற்றங்களும் மாணவர்களும்' எனும் தலைப்பில் பத்திரிக்கைத் தலையங்கம் தயார் செய்யுங்கள்.

28. உங்கள் பள்ளி ஆண்டு விழாவில் வருகை தரவிருக்கும் பிரபல திரைப்பட இயக்குநர் சங்கள் அவர்களின் திரைப்படத்தின் இன்றைய நிலைகுறித்து நேர்காணல் நடத்திட 5 வினாக்கள் கொண்ட வினாநிரல் தயார் செய்யுங்கள்.

29. ஆசிரியர் நா. வானமாமலை அவர்கள் 'பொன்னிறத்தாள் கதை' வாயிலாக உணர்த்து உணர்வுகளைத் தொகுத்து எழுதுங்கள்.

30 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு இருபக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள் மதிப்பெண்கள் எட்டு வீதம்

(2 × 8 = 16 மதிப்பெண்கள்)

30. நாட்டுப்பற இதழில் வெளியிடுவதற்காக 'நாட்டுப்புறப்பாடல்களின் தனித்தன்மைகள்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

குறிப்புகள்:

★ ஏற்றப்பாட்டு

★ தாலாட்டு பாடல்கள்

★ ஒப்பாரி பாடல்கள்

★ திருமணப் பாடல்கள்

31. உங்கள் பள்ளி இலக்கியமன்றம் சார்பாக வெளியிடவிருக்கும் இலக்கியமலரில் மரபுக் கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளை விளக்கி கட்டுரை எழுதுங்கள்.

குறிப்புகள்:

– மரபுக்கவிதை

– புதுக்கவிதை

– ஹைகூ கவிதை

32. உலகத் தாய்மொழி தினத்தையொட்டி தமிழ் உயராய்வு மையம் 'தமிழ் மொழியின் தொன்மையும் சிறப்புகளும்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்த உள்ளது. அதில் பங்குபெற கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்புகள்:

மொழிப்பற்று –

மொழி இழப்பு

பிற மொழி தாக்கம்

வழிமுறைகள்

———————

aglasem.com

aglasem.com